செய்தி வெளியீடு எண்: 1

# அரசு செய்தி வெளியீடு – 2.1.2008

**பொதுமக்கள் பாதிக்காத அளவிற்கு சில்லறை விலையில் சிமெண்ட்டை வழங்குவது குறித்து இன்று (2–1–2008) காலையில் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் – கனிம வளத் துறை அமைச்சர் பொன்முடி, தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், உணவுத் துறை செயலாளர், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத் தலைவர், தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் விவாதித்தார். அதன் பின் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :–**

**உடனடியாக ஒரு இலட்சம் டன் சிமெண்டை மத்திய அரசின் கனிமப் பொருட்கள் மற்றும் உலோகங்கள் வணிகக் கழகம் (எம்.எம்.டி.சி.) மூலம் அரசு நிறுவனமான டான்செம் இறக்குமதி செய்வதற்கான ஆணையை இன்றைய தினமே பிறப்பிப்பது என்றும் – இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் சிமெண்டை தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் 200க்கு மேற் பட்ட மாவட்ட மற்றும் வட்டங்களில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைத்து – நேரடியாக நுகர்வோருக்கு அடக்க விலையில் இலாபம் ஏதுமின்றி விற்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.**

**மேலும் டான்செம் தேவைக்கேற்ப நேரடி ஒப்பந்தப் புள்ளி மூலம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஏற்பாட்டினை விரைவு படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் உடனடியாக எடுக்க வேண்டு மென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.**

**இவைகளுக்கெல்லாம் பிறகு தனியார் சிமெண்ட் அதிபர்கள் தங்கள் விலையைக் குறைத்துக் கொள்ள முன் வரவில்லை என்றால், பொது மக்களின் நலன் கருதி தமிழகத்திலே உள்ள தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகளை அரசே நாட்டுடைமையாக்கிட நடவடிக்கை யெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் இந்தக் கூட்டத்தில் முடி வெடுக்கப்பட்டது.**

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.